**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 250/2017**

திரு.கார்த்திகேயன் (P.W.–3) **08.09.2025**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி.</u>**

1. நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சம்மன் வந்தன் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் 2013 – 2014 ம் வருடத்திற்குரிய 3ம் பிரதிவாதியின் வருமான வரி கணக்கு விவரங்கள். இந்த கணக்கு விவரங்களை தயார் செய்ய ஆவணங்கள் யார் கொடுத்தார்கள் என்பது ஞாபகம் இல்லை. அந்த சமயத்தில் கொடுக்கப்பட்ட ஆவணங்களின் நகல்கள் என்னிடம் எதுவும் இல்லை. வா.சா.ஆ– 25 ல் 5வது பக்கத்தில் Depreciation value ரூ.17,87,131/– என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. அதே பக்கத்தில் Machinery Maintainance செலவுகள் என்று ரூ.2,65,194/– என்று சொல்லப்ப்டடுள்ளது. வா.சா.ஆ– 25 ல் பக்கம் எண்.4 ல் Plantation Machinery value ரூ.1,19,79,896/– என்று சொல்லப்பட்டுள்ளது. அதற்கு Depreciation value 15 சதவீதம் போடவேண்டும். ரூ.17,90,972/– என்று சொல்லவேண்டும். இந்த விவரங்கள் வருமான வரி சட்டத்திற்கு உட்பட்டு சொல்லப்படவேண்டும்.

2. ரூ.17,90,972/– தொகை வங்கியில் வைப்பீடு இருக்காது. credit ஆகவும் இருக்கலாம். வேறு வகையாகவும் இருக்கலாம். அந்த தொகை விவரங்கள் கணக்கில் கண்பிக்கப்பட்டுள்ளது. சாட்சி தன்னிசையாக முன்வந்து வருமான வரி செலுத்துவர்கள் அவர்களுடைய கணக்கில் நிரந்தர சொத்துக்களை தனியாக குறிப்பேடுகளில் பராமரிப்பார்கள். அதற்குரிய தேய்மானங்கள் செலவுகளில் இருந்து கழித்துவிட்டு வருமான வரி செலுத்தும்போது வருமான வரிப்படி என்ன தேய்மானமோ அதை குறிப்பிடுவார்கள் என்று கூறுகிறார். வா.சா.ஆ– 25 ல் சொல்லப்பட்டுள்ள opening balance amount 3ம் பிரதிவாதி நிறுவனத்தின் ஆவணங்களை கொண்டு சொல்லப்பட்டுள்ளது. யார் கொடுத்தார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை.யார் 3ம் பிரதிவாதி நிறுவனத்திற்கு என்னை அறிமுக படுத்தினார்கள் என்பதும் ஞாபகம் இல்லை. நான் தற்போது auditor தொழில் செய்வது இல்லை.

3. வா.சா.ஆ– 25 ல் 8 வது பக்கத்தில் முதல் வாதியின் முதலீடு கணக்குப்படி அவருடைய சொந்த செலவுக்காக எடுத்துக்கொண்டது ரூ.16,26,100/– என்று சொல்லப்பட்டுள்ளது. அதன் விவரங்களுக்குரிய கணக்கு புத்தங்கள் கொண்டு வந்தார்கள். Voucher கள், Book of accounts கொண்டுவந்தார்கள். அதன் அடிப்படையில் அந்த கணக்குகள் சொல்லப்பட்டுள்ளது. வா.சா.ஆ– 25 ன் படி 1 ம் வாதியின் நடப்பு கணக்கு விவரங்கள் சொல்லப்பட்டுள்ளது. ரேணுகாதேவி, கஸ்தூரியும் 3 ம் பிரதிவாதி நிறுவனத்தின் பங்குதாரர்கள். வா.சா.ஆ– 25 ல் ரேணுகாதேவி கையொப்பம் இல்லை. கஸ்தூரி கையொப்பம் உள்ளது. வா.சா.ஆ– 25 தயார் செய்யப்பட்ட தேதி 30.09.2013. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் முதல் வாதி எனக்கு அனுப்பியதா என்பது எனக்கு தெரியவில்லை. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் மேலே சொன்ன ஆவண விவரங்களை குறிப்பிட்டு நானே எழுதியுள்ளேன்.

4. 27.01.2016 ம் தேதி சாட்சி முதல் வாதியால் அனுப்பட்ட அறிவிப்பு அலுவலக நகல் – **வா.சா.ஆ– 26**. அந்த அறிவிப்பிற்கு 3.2.2016 ம் தேதி சாட்சியால் கொடுக்கப்பட்ட பதில் அசல் – **வா.சா.ஆ– 27**. வா.சா.ஆ– 27 ற்கு அனுப்பட்ட பதில் தான் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் – **வா.சா.ஆ– 28.** அந்த ஆவணம் எனக்கு வந்தாகவே ஞாபகம் இல்லை. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் அஞ்சலக ஒப்புதல் அட்டையில் அலுவலக முத்திரை உள்ளது. அஞ்சலக ஒப்புதல் அட்டை **வா.சா.ஆ– 28** உடன் இணைப்படுகிறது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் 3 ம் பிரதிவாதி 2014–2015 ம் வருடத்திற்கு வருமான வரி விவரங்கள் தாக்கல் செய்ய அறிவுறுத்திய கடிதம். அது **வா.சா.ஆ– 29.**

5. அந்த ஆவணத்தில் VM associates என்று கையொப்பம் செய்யப்பட்டுள்ளது. எனக்கு கீழ் பணிபுரியும் நபர்கள் தயார் செய்வார்கள். நான் கையொப்பம் செய்வேன். 2014–2015 ம் வருடத்திற்குரிய வருமான வரி கணக்கு விவரங்கள் தாக்கல் செய்யப்பட்டதா என்று எனக்கு ஞாபகம் இல்லை.

ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆகவே எனது தரப்பு சான்று ஆவணங்களை ஏற்று வழக்குப்படி உத்தரவு ஆக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

2 ம் பிரதிவாதி ஆஜர். சாட்சி ஆஜராகியும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN Digitally signed by K R KANNAN Date: 2025.09.08 18:17:13 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.